செ.வெ. எண்: 83 நாள்: 26.01.2012

பத்திரிக்கை சுற்றறிக்கை

"சென்னை அறிவியல் விழா – 2012"

தமிழக அரசின் உயர் கல்வித் துறையை சார்ந்த அறிவியல் நகரம் "சென்னை அறிவியல் விழா " என்ற மாபெரும் அறிவியல் நிகழ்வினை சனவரி 27 முதல் 30 ஆம் தேதி வரை அண்ணா ஜெம் அறிவியல் பூங்கா பள்ளியில் நடத்த உள்ளது. இந்நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் P.பழனியப்பன் அவர்கள் துவக்கி வைத்து பெண் விஞ்ஞானிகளுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது, இளம் பெண் விஞ்ஞானி விருது மற்றும் பள்ளி மாணவர்களுக்கான அறிவியல் விருதுகளை வழங்க உள்ளார்.

இவ் அறிவியல் விழாவின் நோக்கம் மாணவர்களிடையே அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் அறிவியலில் ஊக்கம் விளைவிப்பதாகும். இவ்விழாவில் 120 அரங்குகளில் அறிவியல் கண்காட்சிப் பொருட்கள் அமைக்கப்பட்டு "அன்றாட வாழ்வில் அறிவியல்" என்ற கருத்திற்கேற்ப நிகழ்த்தப்பட உள்ளது. அது மட்டுமல்லாமல் பிரபல விஞ்ஞானிகள் மற்றும் கல்வியாளர்களால் பிரபல விரிவுரைகள் மற்றும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட உள்ளது. இவ் அறிவியல் விழாவில் தலை சிறந்த அறிவியல் கூடங்களான சென்னை பல்கலைக் கழகம், அண்ணா பல்கலைக் கழகம், தமிழ் நாடு கால்நடை மருத்துவ பல்கலைக் கழகம், மா. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், இந்திரா காந்தி அனல் மின் நிலையம், டாக்டர். எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக் கழகம் போன்ற தலைச் சிறந்த நிறுவனங்கள் பங்கேற்று மக்களிடையே அறிவியலின் தாக்கத்தை ஏற்படுத்த உள்ளது. இவ் அறிவியல் விழா 5 கருத்துக்களில் நடத்தப் பட உள்ளது. அவை

1. சுகாதாரம்
2. ஆற்றல்
3. சுற்றுச்சூழல்
4. கால்நடை அறிவியல் மற்றும்
5. அடிப்படை அறிவியல்

இந்நிகழ்ச்சியில் தொகுப்பு சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டு உள்ளது மற்றும் விருது பெறும் பெண் விஞ்ஞானிகள் பற்றிய விபரங்களும் இணைக்கப்பட்டுள்ளது.

துணைத்தலைவர்,
அறிவியல் நகரம்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**